2006 செப்டம்பர் 2]

மாண்புமிகு திரு. கோ.சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லாவிதமான நடவடிக்கைகளும் தமிழில்தான் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்ற அடிப்படையிலேதான் நடவடிக்கைகளை மேற்கொள்கிறோம். ஆங்காங்கே, Boards, Digital Board–கள் எழுதிவைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றிலே விவரங்கள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. இஃதன்னியில், சங்கங்களின் உள்ளே boards–களும் மாட்டப்பட்டிருக்கின்றன. அவற்றிலும் விவரங்கள் இருக்கின்றன. இதையெல்லாம் தெரிந்துகொள்ளலாம். அப்படி ஏதாவது முன்னுக்குப் பின் முரணாக எங்கேயாவது சங்கத்தில், ஏதாவது கடைகளில் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருப்பார்களேயானால், இந்த அரசாங்கத்தினுடைய கவனத்திற்கு உடனடியாகக் கொண்டுவந்தால், தக்க நடவடிக்கையை நிச்சயமாக இந்தத் துறை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன்.

முற்பகல் 10–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 145, மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரங்கராஜன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

145—

போக்குவரத்து அலுவலகம்

*** 2272–திரு. என்.ஆர். ரங்கராஜன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை நகரில் வட்டாரப் போக்குவரத்துத் துணை அலுவலகம் அமைக்க, அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 9–8–2006 அன்று மானியக் கோரிக்கையின்போது, நடப்பு நிதியாண்டில் பட்டுக்கோட்டை நகரில், வட்டாரப் போக்குவரத்துத் துணை அலுவலகம் அமைக்கப்படும் என அறிவிப்பு வெளியிடப்பட்டது. அதன் அடிப்படையில், நடப்பு நிதியாண்டில், பட்டுக்கோட்டை நகரில் வட்டாரப் போக்குவரத்துத் துணை அலுவலகம் அமைத்திட அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

[2006 செப்டம்பர் 2

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரங்கராஜன், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம்.

திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்குவத்துத் துறை அமைச்சருடைய பதிலுக்கு நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கூ.ந. சேகரன்.

திரு. கூ.ந. சேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவெறும்பூர் தொகுதியை எடுத்துக்கொண்டால், மிகப் பெரிய தொழில் நகரம். அந்தக் காரணத்தாலேயே, அந்தப் பகுதியிலே மிகப் பெரிய கனரக வாகனங்களும், நீளமான வாகனங்களும், அதுமட்டுமல்லாமல், தொழில் நகரமாக இருக்கின்ற காரணத்தால், அங்கே வசிக்கின்ற எல்லா மக்களிடத்திலும் வீட்டிற்கு இரண்டு வாகனங்கள் என்கின்ற அடிப்படையிலே இரண்டு சக்கர வாகனங்கள் எல்லாம் நிறைய இருக்கின்றன. இந்த வாகனங்கள் எல்லாம், வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குச் செல்லவேண்டுமானால், நகரின் மையப் பகுதியிலே இருக்கின்ற, திருச்சியிலே இருக்கின்ற வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குத்தான் செல்லவேண்டியிருக்கிறது. ஏற்கெனவே, போக்குவரத்து நெருக்கடியால் திணறிக் கொண்டிருக்கின்ற அந்த திருச்சி மாநகரத்திற்கு, இதுபோன்ற நீளமான வாகனங்கள், வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குச் செல்கிறபோது, தேவையில்லாத அந்த நெருக்கடி...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியை மட்டும் கேளுங்கள்.

திரு. கூ.ந. சேகரன்: போக்குவரத்து நெருக்கடி ஏற்படுகிறது. ஆகவே, இவற்றையெல்லாம் கவனத்திலேகொண்டு, அந்தப் பகுதியிலே, திருவெறும்பூரிலேயே வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தினுடைய பிரிவு அலுவலகம் அமைப்பதற்கு இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் போக்குவரத்துத் துறை, கிட்டத்தட்ட 40 R.T.O.-க்களையும், Grade I, Grade II cadre என்ற அளவிலே முந்நூற்றுச்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY LIBRARY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2006 செப்டம்பர் 2]

சொச்சம் அலுவலர்களையும் வைத்துக்கொண்டு இயங்கிக் கொண்டிருக்கிறது. ஏற்கெனவே, 24 இலட்சம் வாகனங்கள் இருந்தபோது அமைக்கப்பட்ட cadre strength அது. இப்போது, அதிகமான அளவிற்கு Officers வேண்டுமென்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் சொல்லியிருக்கிறோம். அதற்கான முன்மொழிவை அனுப்ப வேண்டுமென்று துறையின் வாயிலாகக் கேட்கப்பட்டிருக்கிறது. விரைவிலே புதிய அலுவலகங்கள், இந்த ஆண்டு 5 இடங்களில் அமைக்கப்பட்டதுபோல, மற்ற தேவைப்பட்ட இடங்களிலெல்லாம் இந்தப் போக்குவரத்து அலுவலகங்கள் அமைக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. காரணம், இது செலவு மட்டுமல்ல; அரசாங்கத்திற்கு பெரிய வருவாயைக் கொடுக்கக்கூடிய துறை என்ற காரணத்தால், அதற்காக அதிகாரிகள் மட்டத்திலே ஆய்வுசெய்து, ஓரளவுக்கு இசைவு தந்திருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கலந்து, புதிய அலுவலகங்கள் அமைக்கப்படும்போது, நிச்சயமாக திருவெறும்பூர் பகுதியிலும் துணை அலுவலகம் அமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 146, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பொன்னுசாமி, மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

146—

தனி வட்டம்

* 718—**திரு. கே. பொன்னுசாமி:**

மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாமக்கல் மாவட்டம், கொல்லிமலையைத் தனி வட்டமாக அறிவிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS